# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண்.** 40/2022

பெயர் : லலிதா (PW1)

த/க/பெ. :

தேதி : 08.03.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் குரங்குபுத்தூரில் வசிக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி மேலையூர் மெயின் ரோட்டில் வசிக்கிறார் என்றால் சரிதான். அவருடைய வீட்டிற்கு பின்புறம் நான் வாங்கியதாக சொல்லும் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்தின் வடக்கு மற்றும் தெற்கு பிரதிவாதியின் சொத்து என்றால் சரிதான். குரங்குபுத்தூருக்கும் வழக்குசொத்திற்கும் 4 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சுமார் 3 கிலோ மீட்டர் இருக்கும். வழக்குசொத்து சுமார் 30 தென்னை மரங்கள் உள்ளது என்றால் தற்போது உள்ளது நான் வாங்கும்போது இல்லை. நான் வாங்கி மரம் வைத்ததாக அறிவிப்பும் மற்றும் பிராதில் சொல்லவில்லை, தாவாச்சொத்திற்கு வடக்கே பிரதிவாதியின் சொத்தில் மோட்டார் வைத்துள்ளார். 30 தென்னை மரங்கள் பிரதிவாதி வைத்து வளர்த்த மரங்கள் என்றால் சரியல்ல. தற்போது தாவாச்சொத்தில் என்னை அனுமதிக்கவில்லை அதனால் அதில் என்ன உள்ளது என்பது எனக்கு தெரியவில்லை. அது தொடர்பாக பூம்புகார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். சிவில்வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அனுகுமாறு கூறினார். புகார் 2019 ல் கொடுத்தேன். புகார் கொடுத்த நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 2019 வரை சொத்திற்கு நான் சென்று வந்தேன்அதன் பிறகு அனுமதிக்கவில்லை. தாவாச்சொத்திற்கு கிழக்கே கலியமூர்த்தி மனை உள்ளது என்றால் சரிதான்,. மேற்கே காந்திமதி நிலம் என்றால் சரிதான். கலியமூர்த்தி பிரதிவாதியின்தம்பி என்றால் சரிதான். தாவாச்சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் ஒன்றாகதான் உள்ளது. பூம்புகார் காவல்நிலையத்தில 2,3 முறை புகார் கொடுத்துள்ளேன். வருடம், தேதி நினைவு இல்லை. வழக்குச்சொத்திற்கு போவதற்கு வழி இல்லை என்றால் வழி தருவதாக பிரதிவாதி கூறினார். கிரைய பத்திரத்தில் அவ்வாறு எழுதப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. கிரைய பத்திரத்தில் பாதை பொறுத்து எழுதப்படவில்லை என்றாலும் தாவாச்சொத்திற்கு வழி எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கிற்கு

முன்பு பிரதிவாதி சட்ட அறிவிப்பு கொடுத்துள்ளார். அதற்கு பதில் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும்அறிவிப்பு மற்றும அஞ்சல் ஒப்புகை அட்டை எனக்கு கொடுத்தது என்றால் சரிதான்.அது **பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குச்சொத்துக்கு போக வர பாதை இல்லை என்ற விவரம் தெரிந்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திலேயே கடனுக்கு செக்யூரிட்டிக்காக கிரைய ஆவணம் சொல்லியுள்ளார்என்றால்சரியல்ல. பிரதிவாதியின்நெருக்கடியான நேரத்தில் நான் கிரைய ஆவணத்தை எழுதிகொடுத்ததனால் பணம் தருவதாக சொல்லியதால் எழுதிக்கொடுத்தார் என்றால்சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தன்னிச்சையாக மனபூர்வமாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. கோவிந்தராஜ், செல்வக்குமார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். செல்வகுமார் சிதம்பரத்தை சேர்ந்தவர். கோவிந்தராஜ் மேலையூர். செல்வகுமார் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிப்பாரா என்றால் அளிப்பார். மயிலாடுதுறை மேலையூர் புதியதாக சாலை எதுவும்தற்போது போடவில்லை. நிலத்தின் விலை தற்போது கூடிபோய்விட்டதால் சொத்தை திரும்ப அபகரிக்க முயல்வதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய கடனுக்கு வட்டியுடன் கொடுக்க பிரதிவாதி முன்வந்து நான் பெற்றுக்கொள்ளவிலலை என்றால் சரியல்ல. கடனுக்கு பிணையமாக கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் என்றாலும் பணத்தை திரும்ப கொடுக்கும்போது மறு கிரைய ஒப்பந்தம் செய்யவேண்டும்என்று வாய்மொழி ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 4 லட்சம் கிரையத்தொகை இல்லை கடன் தொகை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்திற்கு 50 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதியின்அனுபவத்திலும் தொடர்ச்சியாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2019 வரை தென்னை மரம் போட்டதாக சொல்வது பொய் என்றாலும் நான் அந்த இடத்தில் ஒரு முறைகூட கால்வைக்கவில்லை என்றாலும் சரியல்ல. 2011ல் வாங்கியது என்றாலும் பட்டா மாற்றம் செய்யப்படடது 17.09.2021 என்றால்சரிதான். எனக்கு உண்மையாகவே சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் ஏற்படவில்ல என்பதால் வழக்கிற்கு முன்பாக பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வசம் கோருவதற்கு எனக்கு எந்தவித உரிமை இல்லை என்றாலும் பிரதிவாதியின் வசத்திலிருந்து வட்டி மற்றும் அசல்தான்கோர முடியும் என்றால்சரியல்ல. ஆகையால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.